(எட்டாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **39**.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2018 ஒக்டோபர் 09, செவ்வாய்க்கிழமை பி.ப.1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்நாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பழனி திகாம்பரம்,** மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ எஸ். பீ. நாவின்ன,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள் , டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் வெளிநாட்டுத் தொழில்வாய்ப்புக்கள் அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர் மற்றும் சிறுவர் அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ பைஸர் முஸ்தபா,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** இளைஞர் அலுவல்கள், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் தென் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாஸ ராஜபக்ஷ,** உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹஷீம்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா,** வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிரதேச அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீரகுமார திசாநாயக்க,** மகாவலி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** மின்வலு மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம,** மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** சர்வதேச வர்த்தக இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்,** நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி,** தேசிய ஒற்றுமை மற்றும் சகவாழ்வு இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர்

**கௌரவ லஸந்த அலகியவன்ன,** நிதி மற்றும் வெகுசன ஊடக பிரதி அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ பிரதி அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** உள்ளக அலுவல்கள் மற்றும் வடமேல் அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அரச நிருவாக முகாமைத்துவ மற்றும் சட்டமும் ஒழுங்கும் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ புத்திக பத்திறண,** கைத்தொழில் மற்றும் வாணிப அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** தேசிய ஒருமைப்பாடு, நல்லிணக்கம் மற்றும் அரசகரும மொழிகள் பிரதி அமைச்சர்

**கௌரவ கே. காதர் மஸ்தான்,** மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு மற்றும் வடக்கு அபிவிருத்தி பிரதி அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** சுற்றாடல் பிரதி அமைச்சர்

**கௌரவ நிஷாந்த முதுஹெட்டிகமகே,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ முத்து சிவலிங்கம்,** சமூக நலன்புரி மற்றும் ஆரம்பக் கைத்தொழில் பிரதி அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கடற்றொழில், நீரக வளமூல அபிவிருத்தி மற்றும் கிராமியப் பொருளாதார அலுவல்கள் பிரதி அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷமன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ ரவி கருணாநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ வேலு குமார்**

**கௌரவ நாலக்க பிரசாத் கொலொன்னே**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ சந்திரசிறி கஜதீர**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ பத்ம உதயசாந்த குணசேகர**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ சிசிர ஜயகொடி**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ பிரேமலால் ஜயசேகர

கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன

கௌரவ மயில்வாகனம் திலகராஜா

கௌரவ க. துரைரெட்ணசிங்கம்

கௌரவ ஜனக பண்டார தென்னகோன்

கௌரவ சிறினால் டி மெல்

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா

கௌரவ அநுர திசாநாயக்க

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ விமலவீர திசாநாயக்க

கௌரவ சாலிந்த திசாநாயக்க

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ டிலான் பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ ஜோன்ஸ்டன் பர்னாந்து

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்**

**கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க**

**கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா**

**கௌரவ பிமல் ரத்நாயக்க**

**கௌரவ சீ. பீ. ரத்நாயக்க**

**கௌரவ லொஹான் ரத்வத்தே**

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல**

**கௌரவ இஷாக் ரஹுமான்**

**கௌரவ முஜிபுர் ரஹுமான்**

**கௌரவ ஹர்ஷண ராஜகருணா**

**கௌரவ சமல் ராஜபக்ஷ**

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி**

**கௌரவ விதுற விக்கிரமநாயக்க**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ தேனுக விதானகமகே**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ திலங்க சுமதிபால**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. சபாநாயகரின் அறிவித்தல்கள் :** பிரதிச் சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:—

**I**

"அரசியலமைப்பின் 121(1)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சவாலுக்குட்படுத்தப்பட்ட 'அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தம்' எனும் சட்டமூலம் சம்பந்தமாக உயர் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட மனுக்கள் மீதான தீர்ப்பை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகிறேன்.

சட்டமூலத்தில் 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 19, 20, 21, 22, 23, 26, 27, 28, 29, 30, 32, 34, 35, 36 மற்றும் 37 ஆம் பிரிவுகள், அரசியலமைப்பின் 84(2) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் விசேட பெரும்பான்மை வாக்குகளினாலும் மற்றும் மக்கள் தீர்ப்பொன்றில் மக்களால் அங்கீகரிக்கப்படுவதன் மூலமும் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென உயர் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மேலும் அரசியமைப்பின் 82 (5)ஆம் உறுப்புரையின் பிரகாரம் சட்டமூலத்தின் 17, 18, 24, 25, 31 மற்றும் 33 ஆம் பிரிவுகள் விசேட பெரும்பான்மை வாக்குகளினால் நிறைவேற்றிக் கொள்ள முடியுமென உயர்நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு இன்றைய கூட்ட நடவடிக்கைகள் பற்றிய அதிகார அறிக்கையில் பதிப்பிட வேண்டுமென நான் கட்டளையிடுகின்றேன்."

**II**

"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 79 ஆம் உறுப்புரையின் பிரகாரம், 2018 செத்தெம்பர் 28 ஆம் திகதி 'வானூர்தி மூலம் ஏற்றிச் செல்லல், பிரதேச சபைகள் (திருத்தம்)' மற்றும் 'இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்)' எனும் சட்டமூலங்களிலும், 2018 ஒக்டோபர் 04 ஆம் திகதி 'பெருந்தோட்டப் பிராந்தியத்துக்கான புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபை மற்றும் பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்)' எனும் சட்டமூலங்களிலும் சபாநாயகரால் சான்றுரை எழுதப்பட்டதென்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) பிரதிச் சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் —

(i) 2013 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும் ;

(ii) 2014 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் XII ஆம் பகுதியையும்;

(iii) 2015 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் இரண்டாவது தொகுதியின் XXVI ஆம் பகுதியையும்; மற்றும்

(iv) 2017 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் மூன்றாவது தொகுதியின் I ஆம் பகுதியையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனவும் **அச்சிடப்பட** வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) பிரதிச் சபாநாயகர்,

(i) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (2018.04.01 -2018.06.30) நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 41ஆ(6) உறுப்புரையின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கான (2017.04.01 -2017.06.30) இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்,

(i) 2016 ஆம் ஆண்டின் நிதி ஆணைக்குழுவின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை; மற்றும்

(ii) 2016 ஆம் ஆண்டின் தேர்தல் ஆணைக்குழுவின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி அறிக்கைகளை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை போக்குவரத்து மற்றும் தொலைத்தொடர்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான அநுராதபுர மாவட்டச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கையையும் ஆண்டுக் கணக்குகளையும் சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2013 ஆம் ஆண்டுக்கான தேசிய கைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகாரசபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வியாபாரம் மற்றும் வணிகம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான ஹெக்டர் கொப்பேகடுவ கமநல ஆராய்ச்சி, பயிற்சி நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை கமத்தொழில் மற்றும் காணி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை வலுவாதார அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்,

(i) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் பிரிஷாந்த குணவர்த்தன அவர்களை 2018.01.24 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் நியமித்தல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 29 ஆம் திகதிய 2077/34 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(ii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 20(4) (ஆ) ஆம் பிரிவின் கீழ் தொல்பொருளியல் பட்டப்பின் படிப்பு நிறுவகத்தின் பணிப்பாளருக்குப் பதிலாக தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராசிரியர் பிரிஷாந்த குணவர்த்தன அவர்களை 2018.04.24 ஆம் திகதி முதல்

2018.06.30 ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில் நியமித்தல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூன் 29 ஆம் திகதிய 2077/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, றுகுணு பல்கலைக்கழகத்தின் மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 09 ஆம் திகதிய 2079/10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(iv) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் மருத்துவ விஞ்ஞானங்கள் பீடத்தில் இணைந்த சுகாதார விஞ்ஞானங்கள் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 09 ஆம் திகதிய 2079/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(v) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பீடத்தில் ஆங்கில மொழிக் கற்பித்தல் துறையொன்றை நிறுவுதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2018 யூலை 09 ஆம் திகதிய 2079/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை;

(vi) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவத்துறைக் கற்கைகள் பீடத்தில் சந்தைப்படுத்தல் முகாமைத்துவக் கற்கைத் துறை மற்றும் மனிதவள முகாமைத்துவக் கற்கைத் துறையொன்றும் பிரயோக அறிவியல் பீடத்தில் சுகாதார மேம்படுத்தல் கற்கைத் துறை மற்றும் கணனி கற்கைத் துறையை நிறுவுதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 யூலை 09 ஆம் திகதிய 2079/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(vii) 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27(1) ஆம் பிரிவின் கீழ் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின் மீது, சபரகமுவ பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் நிறுவுதல் தொடர்பில் உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 01 ஆம் திகதிய 2082/32 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து மேற்படி கட்டளைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2002 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, குற்றவியல் கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2018 செப்டெம்பர் 11 ஆம் திகதிய 2088/28 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட கட்டளையை சமர்ப்பித்து மேற்படி கட்டளையை சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(13) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் வருடாந்த செயற்திறன் அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(14) மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், 2016 ஆம் ஆண்டின் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாற்றுகை தொடர்பில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119 (4) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை அரசாங்க கணக்குகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(15) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2016 ஆம் ஆண்டுக்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபையின் ஆண்டறிக்கையை சமர்ப்பித்து மேற்படி அறிக்கையை பொருளாதார அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல் :** (1) அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ எம்.ஏ. சுமந்திரன் அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) வருடாந்த மதிப்பீடுகள் பற்றிய அறிமுகக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள தேசிய வரவு செலவுத் திணைக்களத்தின் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப் பொறுப்புக்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள மேலதிக ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு; மற்றும்

(ii) 2018 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டு வரையிலான நிதி செயலாற்றுகை அறிக்கை

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) தேசியப் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ மலித் ஜயதிலக அக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட,

(i) தேசிய அரசுப் பேரவையின் 1977 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க, மீள ஒப்படைத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழான கட்டளை"

(ii) "1998 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க, தனியார் பாதுகாப்பு முகவர் நிறுவனத்தின் ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதி" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) நாஉல, உடகாடுவ, இல. 236 – டி யில் வதியும் திமதி பி.ஜி. தரங்கா லக்மாலி பெரேராவினது 2018.08.20 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ வஸந்த அளுவிஹாரே சமர்ப்பித்தார்.

(2) பிட்டகோட்டே, பாகொட வீதி, ஆனந்த பாளிகா மாவத்தை, இல. 49/ஏ யில் வதியும் திரு. டப்ளியூ.ஏ. அமித் குமார பெரேராவினது 2018.07.17 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) சுமேதா ஜி. ஜயசேன சமர்ப்பித்தார்.

(3) (i) சேருவில, சோமபுர, இல. 99/1, எல்பீ - 02 இல் வதியும் திரு. டி.ஏ. வஸந்த குமாரவினது 2018.08.08 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) அம்பாறை, தடயம்தலாவ, ருஹுணுகம, இல. 26/122 இல் வதியும் திரு. டப்ளியூ.ஏ. சம்சனினது 2018.09.12 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும் கௌரவ சுசந்த புஞ்சிநிலமே சமர்ப்பித்தார்.

(4) கெட்டஹெத்த, வளவிட, கெட்டமிரிஸ்பிட்டிய, இல. 129/ஏ யில் வதியும் திரு. எச். ஓபநாயக்கவினது 2018.07.30 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சிரினால் த மெல் சமர்ப்பித்தார்.

(5) (i) போப்பே - காலி, ஜின்தோட்டை, முத்தெட்டுகேவத்த, இல. 158/1 பீ யில் வதியும் திரு. ஈ.ஜே.பி. தினேஷ் அஞ்ஜுலவினது 2018.07.07 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(ii) காலி, எலியட் வீதி, இல. 180 பீ யில் வதியும் திரு. கே.எம்.ஜி.ஏ.ஜி.டப்ளியூ. டயஸினது 2018.09.09 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்;

(iii) காலி, இரண்டாம் ஒழுங்கை, மாஇட்டிப்பே, உடுமுல்ல தோட்டம், இல. 245/19 இல் வதியும் திரு. மனோஜ் நுவன் குமார மாயிட்டிப்பேயினது 2018.08.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவையும்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிறண சமர்ப்பித்தார்.

30 (10) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய மேற்படி மனுக்கள் பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. ஒதுக்கீடு:** நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2019 ஆம் நிதியாண்டின் சேவைக்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்தகைய சேவையின் நோக்கத்திற்காக இலங்கையிலோ அல்லது இலங்கைக்கு வெளியிலோ கடன்களைத் திரட்டுவதற்கு அதிகாரமளிப்பதற்கும்; அந்நிதியாண்டின்போது அரசாங்கத்தின் குறித்த சில செயற்பாடுகள் தொடர்பில் நிதி ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்தகைய செயற்பாடுகளின் மீதான செலவினத்திற்கு அந்நிதியாண்டின்போது தேவைப்படும் பணங்களைத் திரட்டுநிதியத்திலிருந்து அல்லது அரசாங்கத்திற்குக் கிடைக்கக்கூடியதாகவுள்ள அல்லது அதன் கையாளுகையிலுள்ள வேறேதேனும் நிதியத்திலிருந்து அல்லது பணங்களிலிருந்து முற்பணமாகக் கொடுப்பதை இயலச் செய்வதற்கும்; திரட்டுநிதியத்திற்கு அத்தகைய பணங்களை மீளளிப்பதற்கு ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

மேற்படி சட்டமூலம் 2018 நவம்பர் 05 ஆம் திகதி திங்கட்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் அரச நிதி பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**6. பயங்கரவாத எதிர்ப்பு**: வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— பயங்கரவாதச் செயல்களுக்கெதிராகவும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளுக்கெதிராகவும் இலங்கையையும் இலங்கை மக்களையும் பாதுகாப்பதற்காகவும்; இலங்கையினுள் அல்லது இலங்கைக்கு வெளியே புரியப்படுகின்ற பயங்கரவாதத்தையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் தடுப்பதற்காகவும்; இலங்கைக்கு வெளியே பயங்கரவாதத்துக்கான ஆயத்தஞ்செய்வதற்காக இலங்கையின் ஆள்புலத்தையும் அதன் மக்களையும் பயன்படுத்துவதனைத் தடுப்பதற்காகவும் ஏற்பாடுசெய்வதற்கும்; பயங்கரவாதச் செயல்களையும் பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு தவறுகளையும் கண்டுபிடிப்பதற்காக ஏற்பாடு செய்வதற்கும்; அத்துடன் பயங்கரவாதச் செயலொன்றை அல்லது பயங்கரவாதத்துடன் இணைந்த வேறு ஏதேனும் தவறைப் புரிந்துள்ள எவரேனுமாளை அடையாளங்காணுதல், விசாரணைக்காகப் பற்றுதல், கைதுசெய்தல், அவரின் கட்டுக்காப்பு, அவரைத் தடுத்துவைத்தல், புலனாய்வுசெய்தல், அவருக்கெதிராக குற்றவழக்குத் தொடுத்தல் மற்றும் அவருக்குத் தண்டனையளித்தல் என்பவற்றுக்காகவும்; 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தை நீக்குவதற்காகவும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காகவும் ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

மேற்படி சட்டமூலம் 2018 ஒக்டோபர் 25 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**7. ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுதல்**: நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— வேறொருவரின் தவறான செயல், செய்யாமை, கவனயீனம் அல்லது தவறுகை ஒன்றினால் விளைவிக்கப்பட்ட ஆளொருவரின் இறப்புக்கான சேதவீடுகளை அறவிடுவதற்காக ஏற்பாடு செய்தற்கும் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்.

மேற்படி சட்டமூலம் 2018 ஒக்டோபர் 25 ஆம் திகதி வியாழக்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

**8. பாராளுமன்ற அமர்வுகள்** : பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் பி.ப. 7.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 2.00 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 7.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. ஒத்திவைப்பு (அரையாண்டு அரசிறை நிலைமை பற்றிய அறிக்கை)**: “இப் பாராளுமன்றம் இப்போது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை எடுத்தியம்பப் பெற்று விவாதிக்கப்பட்டது.

“கௌரவ பியங்கர ஜயரத்ன தலைமை தாங்குவாராக” என அரச தொழில்முயற்சி மற்றும் கண்டி நகர அபிவிருத்தி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.3.28 மணிக்கு கௌரவ பியங்கர ஜயரத்ன தலைமை தாங்கினார்.)

“கௌரவ செஹான் சேமசிங்க தலைமை தாங்குவாராக” என நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.4.37 மணிக்கு கௌரவ செஹான் சேமசிங்க தலைமை தாங்கினார்.)

“கௌரவ வேலுகுமார் தலைமை தாங்குவாராக” என போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.5.29 மணிக்கு கௌரவ வேலுகுமார் தலைமை தாங்கினார்.)

“கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்குவாராக” என போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் பிரதி அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப.6.23 மணிக்கு கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பி.ப. 7.26 மணிக்கு பாராளுமன்றம், 2018 ஒக்டோபர் 10, புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.